முற்பகல் 11–05

3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன்:*

1. *திரு. க. அன்பழகன்*
2. *திரு. நா. இராமகிருஷ்ணன்*
3. *திரு.* S.R. *இராஜா*
4. *திரு. தா. உதயசூரியன்*
5. *திரு. துரை. சந்திரசேகரன்*
6. *முனைவர்* T.R.B. *ராஜா*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கடலூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

7. தகவல் கோரல்

ராணிப்பேட்டை மாவட்டம், நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஏதாவது தகவல் சொல்ல வேண்டுமெனில்,* "Zero hour–*ல் தகவல்*

சொல்ல வேண்டும்" என்று சொல்லியிருக்க வேண்டும். நீங்கள் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. நீங்கள் எழுதித் தாருங்கள். நாளை உங்களுக்குப் பேச வாய்ப்பு கொடுக்கப்படும். தற்போது அடுத்த அலுவலுக்குச் சென்றுவிட்டோம்; நாளை நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) நாளை நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) நீங்கள் எழுதித் தந்திருக்க வேண்டுமல்லவா! தற்போது 5 நிமிடங்களுக்கு முன்புதான் என்னிடம் வந்து சொன்னீர்கள். உங்களுக்கு அனைத்து விவரங்களும் தெரியும். (குறுக்கீடு) சட்டமன்றப் பேரவைக்கென ஒரு மரபு இருக்கிறது; Rules and regulations இருக்கின்றன. Zero hour–ல் ஒரு பிரச்சினை பற்றிப் பேச வேண்டுமென்றாலும்கூட, "நான் இவ்வாறு சொல்லப் போகிறேன்" என்று, அதை நீங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். நீங்கள் என்னிடம் எதுவும் சொல்லவில்லையே! (குறுக்கீடு) இல்லை, நீங்கள் 5 நிமிடங்களுக்கு முன்புதான் என்னிடம் வந்து கூறினீர்கள். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் என்ன விஷயம் என்பதை ஒரு வரியில் சொல்லுங்கள். ஆனால், இது சரியான நடைமுறையல்ல. இனிமேல், இதுபோன்ற நடைமுறையை நீங்கள் பின்பற்றாதீர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ராணிப்பேட்டை மாவட்டத்தில் கடந்த கன மழைக்கு முன்பும், பின்பும் விவசாயிகள் அறுவடை செய்த நெல், மாதக்கணக்கில் கொட்டி வைக்கப்பட்டதால், அவை முளைத்து வீணாகிக் கொண்டிருக்கின்றன. விவசாயிகள் அனைவரும் கண்ணீரில் மிதக்கிறார்கள். எனவே, உடனடியாக அங்கே கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உங்களுடைய கோரிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கோரிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டது, அவ்வளவுதான்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

(அ) கடலூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சிச்

சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)*

7. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

ராணிப்பேட்டை மாவட்டம், நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ராணிப்பேட்டை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நெல் கொள்முதல் செய்வது சம்பந்தமாக, ஒவ்வொரு